
திருவள்ளுவர் ஆண்டு 2056 28.05.2025

# உலகத்தமிழ்

இதழ் உஅசுசு (286)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்




ஊசல் ஒண்குழை உடைவாய்த்தன்ன எனத் தொடங்கும்
பாலங்கொற்றனாரின் நற்றிணைப் பாடல் இரு நூற்(று) எண்பத்(து) ஆறு;

வாசல் தேடி வளமான வண்டமிழ்க் கருத்துகளை வந்து தரும்
உலகத் தமிழிதழ் இருநூற்(று) எண்பத்(து) ஆறு;

# உள்ளடக்கம்

1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி (தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடுகள்) 5

3. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 6

4. தமிழெழுச்சி 7

5.பண்ணாராய்ச்சி வித்தகர்! 8

6. அவ்வப்போது! 9

7. தேன்துளி! 10

8. சேரமன்னர் வரலாறு! 12

9. குறளமுதம் 13

10. ஆழங்கண்ட ஆளுமையர்! 14

11. நற்றிணை – ஆங்கிலம் 15

உள்ளடக்கம்

12. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 16

13. கல்வி என்பது பெருங்கடல் 17

14. Brief Life Sketches Of The European Scholars 18

15. வள்ளுவம்! 19

16. தமிழன்னை நான்மணிமாலை! 20

17. அகலாது அணுகாது பழகுக 21

18. மலாயா ஆவணங்கள்! 22

19. பூ மழை 24

20. அறிவோம்! 28

21. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! 30

22. சட்டவியல் அகரமுதலி! 31

23. புகழ் வணக்கம்! 32

# கொள்கை விளக்கக் குறிப்பு...

தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்
(2024 - 2025)

## இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)

### அ) குறள் பரிசு

*மாணவர்களுக்குத் திருக்குறள் மீதான ஆர்வத்தை மேலும் கூட்டிடும் வகையில் திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களையும் ஒப்பித்தல் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகை 2022-2023-ஆம் ஆண்டு முதல் ரூ.10,000/-த்திலிருந்து ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.*

*இப்பரிசுத் திட்டம் தொடங்கப்பட்டு கடந்த 24 ஆண்டுகளில் 920 மாணவர்கள் குறள் பரிசுகள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*2023-2024-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் வாயிலாக 34 மாணவர்கள் 74 மாணவிகள் என மொத்தம் 108 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 31 மாணவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மாணவர் மாநாடு-2024-இல் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. ஏனையோருக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக வழங்கப்பட்டது*

**2024-2025-ஆம் ஆண்டில் ரூ.22,50,000/- (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### a) Kural Prize


*The prize amount has been increased from Rs.10,000/- to Rs.15,000/- (Rupees fifteen thousand only) since the year 2022-2023 to enhance the interest of students in reciting all 1330 couplets of Thirukkural.*

*It is noteworthy that 920 students have received Kural prizes in the last 24 years ever since this prize scheme was introduced. A total of 108 students have benefitted through this scheme, with 34 boys and 74 girls in the year 2023-2024. Award was distributed to 31 students in Thirukkural Students Conference-2024, held at Virudhunagar District. For others, prizes were awarded by respective District Collectors.*


**An amount of Rs.22,50,000/- (Rupees Twenty Two lakh fifty thousand only) has been allocated for the FY 2024-2025.**

# நூலேணி


## தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகள்




| | |
|---|---|
| நூலின் பெயர் | அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 5) |
| நூலாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2025 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | - |




| | |
|---|---|
| நூலின் பெயர் | அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 6) |
| நூலாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2025 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | - |




| | |
|---|---|
| நூலின் பெயர் | அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 7) |
| உரையாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2025 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | - |





| | |
|---|---|
| நூலின் பெயர் | அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 10) |
| உரையாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2025 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | - |


# நூலேணி

120

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்





| | |
|---|---|
| நூலின் பெயர் | தமிழெனப்படுவது |
| நூலாசிரியர் | இரா. கோதண்டராமன் |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.115/- |
| பக்கங்கள் | 378 |
| வெளியீட்டு எண் | 515 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | சங்கத் தமிழர் வாழ்வியல் |
| பதிப்பாசிரியர்கள் | மு. சண்முகம் பிள்ளை |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | 341 |
| வெளியீட்டு எண் | 516 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் |
| பதிப்பாசிரியர் | இராசு. பவுன்துரை |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.80/- |
| பக்கங்கள் | 270 |
| வெளியீட்டு எண் | 517 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி - 3 |
| நூலாசிரியர் | இ. சுந்தரமூர்த்தி, மா.ரா. அரசு |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.60/- |
| பக்கங்கள் | 202 |
| வெளியீட்டு எண் | 518 |

# தமிழெழுச்சி...



மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண் டாங்ஙனே
நண்ணித் தழுவி நறுங்கள் ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்தம் மயங்கிச் சிலபோழ் திருந்த பின்னே,

– பாரதியார்



கொஞ்சு தமிழ்த்தேன் குடித்துவிட அட்டியில்லை
அஞ்சுவ தஞ்சாமை பேதமையன் றோஅணங்கே?
ஆணிப்பொன் மேனி அதில்கிடக்கும் நல்லொளியைக்
காணிக்கை நீவைத்தால் காப்பரசர் வாராரோ?

– பாரதிதாசன்

ஆசிரியம்!

# பண்ணாராய்ச்சி வித்தகர்!



கலைகளில் சிறந்தது இசைக்கலை. இசை உயிரினங்களைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் பெற்றது. சங்ககாலத்து மக்களின் அன்றாட வாழ்வில் இசை பெரிதும் இடம்பெற்றிருந்தது. "வழிப்பறி செய்து பொருளை அபகரிக்கும் கள்வர்களின் கல்மனதையும் கரையச் செய்யும் தன்மை யாழிசைக்கு உள்ளது" எனப் பொருநராற்றுப்படையில் (பா.21-22) முடத்தாமக்கண்ணியார் குறிப்பிடுகிறார்.

இப்படியான சங்க இலக்கியப் பாடல்களில் புதைந்துகிடந்த தமிழ் இசை பற்றிய உண்மைகளை ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ந்து வெளிப்படுத்தியவர் தமிழ்ப் பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் ஆவார்.

28.05.1914இல் சீர்காழியில் பிறந்தவர். தமிழ்ப் பண்கள் குறித்துத் தான் எழுதிய இசைக் கட்டுரைகளைத் 'தமிழ்ப் பொழில்' திங்களிதழில் வெளியிட்டு வந்தார். 'பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்', 'முதல் ஐந்திசைப் பண்கள்', 'தமிழிசை', 'இசைத்தமிழ்ப் பயிற்சிநூல் வினா-விடை' முதலான சிறந்த இசை நூல்களையும் எழுதியுள்ளார். ' நித்திலம்' என்ற திங்கள் இதழின் ஆசிரியராக இருந்தவர்.

பிரெஞ்சு நாட்டு அறிஞர் பிரான்ஸ்வா குரோ, பரிபாடலைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்க முனைந்தபோது, சுந்தரேசனாரை அழைத்துப் பாடச்செய்து பரிபாடலின் உண்மைப் பொருளை உணர்ந்து மொழிபெயர்த்தார் என்பர். "முல்லை நிலத்து ஆயர் மக்கள்தான் முதன்முதலில் குழற்கருவியையும் யாழ் கருவியையும் கண்டு தங்களது பேரறிவினாலே இசைக்கலையை வளர்த்தனர்" என்று மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் இசைப் பேருரையாற்றினார்.

தனது அரிய உழைப்பின் பயனாகச் சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை, தேவாரம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் முதலான நூல்களில் பொதிந்துள்ள இசைக்குறிப்புகளை வெளிக்கொணர்ந்து தமிழ்ப் பண்ணிசைக்குப் பெருமை சேர்த்தவர்.

தமிழோடு இசைந்த இவரது இசைவாழ்வு 09.06.1981 அன்று நிறைவுற்றது. ப.சுந்தரேசனார் நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 12, 2014இல் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது. இவர் பிறந்த இந்நாளில் இவரின் தமிழிசைப் பணியினை எண்ணிப் பெருமை கொள்வோம்! தமிழரின் இசையைக் கொண்டாடுவோம்!

*****



# அவ்வப்போது!

- முனைவர் ஔவை அருள்




"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" எனும் நாமக்கல் கவிஞரின் முழக்கத்தை முன்னிறுத்தி முனைப்பான தமிழ்ப் பணிகளை முப்பொழுதும் செய்துவரும் நம் முதலமைச்சர் அவர்கள் 'எப்பொழுதும் தமிழ், எங்கெங்கும் தமிழ்' என்னும் இதய உணர்வோடு இயங்கிக் கொண்டிருக்கும் வண்ணம், தமிழ் வளர்ச்சித் துறையை எழுச்சியுடன் இயக்கி வருகிறார்.

காலப் பெருவெளியில் கால்கொண்டு நடக்கும் ஒரு மொழியானது, காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்னும் புரிதலோடு, பழைமைத் தரவுகளைத் தேர்ந்து, புதுமை வரவுகளைப் புனைந்து, அறிவியற் கொடைகளை அணிந்து நம் அன்னைத் தமிழ் அன்றன்றும் இனிதாய் ஒளிர்ந்து வருகிறது.

இப்போது, மாறிவரும் சூழலுக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் தனிப்பெரும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட தென்னகத்தின் முதன்மொழிக்குத் தேவைப்படும் சீரெலாம் கொடுத்துச் சிறப்பித்து வருகிறது நம் செந்தமிழ் அரசு.


"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்னும் திருவள்ளுவரின் அருங்குறட்பாக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வகுத்தளித்த பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களைத் தமிழ் வளர்ச்சித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக நிறைவேற்றி வருகிறது.

*********




# தேன்துளி - 1

## எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள் த. பிச்சாண்டி இ.ஆ.ப., (ப.நி.). எழுதிய நூலில் பக்கங்கள் : 167, 168, 169, 179, 187




### உலகத் தமிழ்ச் சங்கம்

உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதற்காக தமிழறிஞர் முனைவர் ஔவை நடராசன் அவர்களின் தலைமையில் ஒரு குழுவைத் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து, பல அரிய ஆலோசனைகளைப் பெற்றார். அவற்றின் அடிப்படையில், உலகத் தமிழ்ச் சங்க அமைப்புக்கு ஒரு வடிவம் கொடுத்து, அந்த உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவிட எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்பாடு செய்தார். இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தந்தார். 1981ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின்போது இந்த உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடத்துக்குக் கால்கோள் விழாவும் நடத்தப்பட்டது.

### தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக 1984ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், 'தமிழ் வளர்ச்சித் துறை' என்ற ஒரு தனித்துறையைத் தலைமைச் செயலகத்தில் முதன்முதலாக உருவாக்கினார். அதற்குத் தமிழறிஞர் முனைவர் ஔவை நடராசன் அவர்களைச் செயலாளராக நியமித்தார். ஐ.ஏ.எஸ். அல்லாத ஒருவர் தலைமைச் செயலகத்தில் சட்டத்துறைக்கு அடுத்தபடியாக வேறு ஒரு துறைக்குச் செயலாளராக நியமிக்கப்படுவது அதுதான் முதல் முறை. 'சட்டம் படித்தவர் சட்டத்துறைக்குச் செயலாளராக இருக்கும்போது, தமிழறிஞர் ஒருவர் தமிழ் வளர்ச்சித் துறைக்குச் செயலாளராக இருப்பதுதானே முறை?' என்று எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார். பின்னர், தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பாற்றவும் அது பற்றிய ஆய்வுகளை ஊக்குவிக்கவும் 1984ஆம் ஆண்டில் இத்துறையின் பெயர் 'தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை' என்று மாற்றப்பட்டது.

**குமரிக்கண்டம்**

குமரியாறு, பஃறுளியாறு என இரண்டு ஆறுகள் இப்போதைய கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்ததாகவும் அவை கடல் கொண்டதால் மூழ்கி மறைந்து விட்டதாகவும் தமிழிலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு, தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!" என்று காடுகாண் காதையில் குறிப்பு உள்ளது. இது பற்றி, ம.பொ.சி. அவர்கள், வி.சி. குழந்தைசாமி அவர்கள், ஔவை நடராசன் அவர்கள் ஆகியோரிடம் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து பேசி, இது தொடர்பாக ஓர் ஆய்வு செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# தேன்துளி - 2

**மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் வாழ்வில் கண்ட முன்னேற்ற நெறிகள்:**

1)எளிய வாழ்வு

2)அளவான பேச்சு

3)எந்நிலையிலும் எதிர்கால நம்பிக்கை

4)பதவிகளைத் தொண்டாக மதித்தல்

5)தன்னைப்பற்றிய திருத்தமான சிந்தனைகள்

6)வாழ்க்கைத் திட்டங்கள்

7)பெரியவர்களின் வரலாறுகளைப் படித்தல்

8)சோர்வுக்கு இடங்கொடாத ஊக்கங்கள்

9)பகட்டின்றித் தூய எண்ணத்தால் இறைவனை வழிபடுதல்

**வழிகாட்டிய தமிழ் மறைகள்**

1)தமிழுக்குத் தொல்காப்பியம்

2)வாழ்வின் உயர்வுக்குத் திருக்குறள்

3)உயிர்த்தூய்மைக்குத் திருவாசகம்



# சேரமன்னர் வரலாறு! 224

– உரைவேந்தர் ஔவை துரைசாமி

## முடிப்புரை

பெரியோருடைய பெருமை என்பது, பிறர்நலம் பாராட்டலும் பிறர்க்கு உளதாகும் குறையறிந்து தாங்கலுமாகும். நாடோறும் இங்கே வந்து இவளது நலம் பாராட்டுவதாகிய பெருமைப் பகுதியை மாத்திரம் மேற்கொண்டு செய்கின்றாய். இந் நங்கைக்கு உண்டாகிய வண்ணக் கேட்டினைக் கேட்டறிதல் பெருமையன்று எனக் கருதுகின்றவர் போல வாளாது போகின்றாய்; ஒரு நாளைக்கேனும் யாங்கள் மனம் தெளியக் கேட்பீராயின், எனக்கு அது மிக்க ஆறுதலையாகும்; நும் பெருமைக்கும் சிறப்பாம் என்றெல்லாம் சொல்லக் கருதிய தோழி, சுருங்கிய சொற்களால் பெருமை யென்பது கெடுமோ?" என்று சொல்லுகிறாள். இதனைக் கேட்டதும் அந்தக் காதலன், "ஏன் இவள் இங்ஙனம் இன்று பேசுகிறாள்" என நினைக்கின்றான். தோழி இதனைச் சொல்லுதற்கு முன்பு அவள் உரைத்தவை அவன் நினைவுக்கு வருகின்றன. பெருங் கடலுள் கிடக்கின்ற மீன்களை அவ்விடத்தினின்றும் தமது வலையால் நீக்கிக் கரைக்குக் கொணர்ந்து இரப்பவர்க்கும் தம் இனத்தவர்க்கும் வழங்கி, மீனாகிய உயிர்களை வருந்தினோமே என்ற உணர்ச்சியின்றி மீன் வேட்டுவர் மணற்குன்றிலே உறங்கும் துறைவனே என்ற கருத்துப்பட,

"நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி...
பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் துஞ்சும் துறைவ,
பெருமை என்பது கெடுமோ?"

என்றான். இதனை நினைத்தபோது, பெருங்குடியிற் பிறந்திருக்கின்ற இவளை நின் காதல் வலையால் நின் வயமாக நீக்கிக், கடிமணம் புரிந்து கொள்ளக் காலம் தாழ்த்து வருத்தி இவள் மேனி வேறுபடுவது கண்டு பிறரெல்லாம் பலப்பல குழும்படி அலராக்கிவிட்டுத் துயரமின்றி நின் மலையின்கண் நீ உறங்குகின்றாயே என்ற கருத்து உள்ளிறுத்தப்பட்டது தெரிகிறது. பின்னர் அவன் அவளை விரைவில் வரைந்து கொள்கிறான். இங்ஙனம் சிந்திக்குமிடத்துச் சிறந்து செந்தேன் முந்திப் பொழியும் முழுநலம் அமைந்த சொற்களைத் தொடுத்துப் பாடும் இச் சேரமான் பாடல் உள்ளுதோறும் உள்ளம் இனிக்கும் உயர்வமைந்ததாகும்.

வளரும்...




## திருக்குறள் அறத்துப்பால்

– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

## 10. திருக்குறள் விரிவுரை (1939 - திரு.வி.க)

ஆதலால், உலகம் எது என்று எங்ஙனம் அறுதியிட்டுக் கூறுவது? எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம். எண்ணத்தின்படியே எல்லாம் உருக்கொள்ளும். எண்ணம் நுண்மை; உரு பருமை.

### நாடு

உலகைப் பற்றிப் பலவாறு கூறுப. அவர்தங் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப இங்கே முக்கூறு படுத்திக் கொள்கிறேன். ஒன்று, உலகம் பூதங்களால் ஆக்கப்பட்டதென்பது; இன்னொன்று, உலகம் நாடுகளால் (Nations) ஆக்கப்பட்டதென்பது; வேறொன்று, உலகம் கலைகளால் ஆக்கப்பட்டதென்பது; இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு. நாடு ஒருவகையில் முன்னையதிலும், மற்றொரு வகையில் பின்னையதிலும் ஒன்றும் நாட்டை வெறும் பௌதிகமாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.

நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. அது கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலியவற்றையுங் கொண்டது. நிலப்பரப்பு, பூதகாரியம், கல்வி, நாகரிகம், வாழ்வு முதலியன கலையின் பாகுபாடுகள். இவ்விரண்டையும் கொண்ட ஒன்றே நாடு என்பது.

### தமிழ்நாடு

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப்பெயர்கள் பெரிதும் அவ்வந்நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ் மொழியில் நூல் செய்தவர். அவர் நினைவு தோன்றும்போது தமிழ்நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ்நாடென்றது இப்போதுள்ள தமிழ்நாட்டைக் குறிப்பதன்று. அது பழந்தமிழ்நாட்டைக் குறிப்பது. தமிழ்நாட்டுக்கு அடிகோலி, அதை ஆக்கிய பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை நன்குணர்ந்தவர். உலகியலில் இருவிதச் சிறப்புகளுண்டு. ஒன்று சிறியது; மற்றொன்று பெரியது. உலகியல், சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலியவற்றில் கலந்தும், இவற்றைக் கடந்தும் விளங்குவது. சாதி மதம் மொழி நிறம் நாடு முதலியன கலந்தநிலை சிறியது; இவற்றைக் கடந்தநிலை பெரியது. சிறிய நிலை பன்மை; பெரிய நிலை ஒருமை. பன்மையில் ஒருமை காண முயல்வது அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குவது அறியாமை.

வளரும்...



# ஆழங்கண்ட ஆளுமையர்...

88

- ஔவை நடராசன்

## காயப்படாத சூரியன் களங்கமிலாத ஓமந்தூரார்

உத்தமர் ஓமந்துராரர், முதலமைச்சர் பதவியை முடித்து விட்டுத் துறவு நிலையில் வடலூரில் வந்து தங்கியிருந்தார். சென்னைக்கு அவ்வப்போது வருவார். ஓமந்தூராரைப் பற்றி, ஒரு குறிப்பைச் சொல்ல வேண்டும். அப்போதைய சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்து ஓய்வு பெற்றவர். முதலில் அவர் திருவண்ணாமலைக்குச் சென்று துறவியாக வாழவேண்டும் என்றுதான் விரும்பியிருக்கிறார்.

ஏனென்றால், துறவிகளில் பலர் திருவண்ணாமலையில்தான் இருந்தார்கள். இரமணர், திருவண்ணாமலையில்தான் இருந்தார். ஆனால், எப்படியோ ஓமந்தூரார் மனம் மாறி வடலூருக்குச் சென்றார். அது எதிர்பாராமல் நேர்ந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஓமந்தூர் என்பது விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர். அங்கு வாழ்ந்த ரெட்டியார் பெருமக்களுக்கு, வள்ளலார் பற்றி நம்பிக்கை, இயற்கையாகவே இருந்தது.

அன்னிபெசன்ட் அம்மையார் பிரம்மஞான சங்கத்தைத் தொடங்குவது பற்றி, வெளிநாட்டு நண்பர்களிடம் விவாதித்ததாகவும் அப்போது வழிகாட்டும் ஒளி நட்சத்திரத்தைப் பார்த்துத் திருவண்ணாமலையை நினைத்ததாகவும், திருவண்ணாமலைக்குப் போகும்போது, ஏதோ ஒரு மாற்றம் வந்து, பின்பு அடையாற்றுக்குச் சென்றதாக மு.வ. ஒருமுறை கூறினார்கள்.

புதுவைக்கு முன்னால், வடலூரைத்தான் அன்னிபெசன்ட் அம்மையார் மனதில் நினைத்தார்களாம். ஆனால், வடலூர் அவர்களுக்கு வாய்ப்புடைய இடமாகத் தோன்றாததால் புதுவைக்குச் சென்றார்கள். அப்போது பிரெஞ்சு அரசின் கட்டுப்பாட்டில், புதுவை இயங்கியது. அங்கிருக்கும் வசதிகளைப் பார்த்து, வடலூரைப் புறக்கணித்து விட்டார்கள் என்று திரு.வி.க சொன்னாராம்.

வளரும்...

## நற்றிணை - 366

தலைவன் தனக்குத் தானே
சொல்லிக் கொள்ளுதல்

பாலை

மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்

அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல் காழ்
வீடுறு நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்
திருந்து இழை அல்குல், பெருந் தோட் குறுமகள்
மணி ஏர் ஐம்பால் மாசு அறக் கழீஇ,
கூதிர் முல்லைக் குறுங் கால் அலரி
மாதர் வண்டொடு சுரும்பு பட முடித்த
இரும் பல் மெல் அணை ஒழிய, கரும்பின்
வேல் போல் வெண் முகை விரியத் தீண்டி,
முதுக் குறைக் குரீஇ முயன்று செய் குடம்பை
மூங்கில்அம் கழைத் தூங்க, ஒற்றும்
வட புல வாடைக்குப் பிரிவோர்
மடவர் வாழி, இவ் உலகத்தானே!

## Natrinai - 366

HE ...

pAlai

madurai eezhattup poothan devanAr

Lasses bewitch; midriffs beckon;
fore–laps hood up; veils reveal;
shoulders ask the gazer and thrill!
Sapphire locks wave on butts! Sheer fun!

Jasmines too; complete anglers, see!
drones do Queen bee on height !
To lair in locks is lovely!
Chill Northerly shakes canes' blooms white;

the nests of baya weavers swing!
Stupid to leave the longing lot!
Why put out the heat within!
Why miss cloacal kiss and shot!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*



# குழந்தைக் கவிஞர் பரம்பரை! 253

- முனைவர் தேவி நாச்சியப்பன்

முனைவர் நா.இராசகோபாலன் அவர்கள் நூலகத் துறையில் பணியாற்றியவர். மலையமான் என்ற புனைப் பெயரில் எழுதி வருகிறார்.

1932ஆம் ஆண்டு பிறந்த எழுத்தாளர் மலையமான் அவர்கள், 1972ஆம் ஆண்டு முதல் எழுதத் தொடங்கினார். 90க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரின் அறிவியல் நூல்கள் குறிப்பிடத்தக்கவை. "அறிவியல் பெரு மணிகள்", "இந்திய விஞ்ஞானிகள்" இரண்டும் சிறுவருக்கான வாழ்க்கை வரலாற்று நூல்கள். இவர் எழுதிய "அறிவியல் சிறுகதைகள்" என்ற நூல் 1986ஆம் ஆண்டு தமிழக அரசின் விருதைப் பெற்றது. "பனித்துளிக் கதைகள்" என்பதும் அறிவியல் சிறுகதையே. "சிரிப்போம் சிந்திப்போம்" என்பது இவர் எழுதிய நகைச்சுவை நூல். ஆங்கிலத்துடன் பிரெஞ்ச், தெலுங்கு ஆகிய மொழிகளையும் அறிந்தவர். பல்வேறு அமைப்புகளின் பரிசுகளையும் விருதுகளையும் பெற்றவர். இவரின் பாடல்களுள் ஒன்று

**"குருவியே வா!"**

**"சின்னக் கடுகுக் கண்களுடன்**
**செழித்த நெல்போல் மூக்குடனே**
**மென்மைத் தவிட்டு நிற உடம்பும்**
**கொண்ட சிட்டுக் குருவியே, வா!**

**தென்னந் துடைப்பக் கால்களுடன்**
**சிறுகொழுக் கட்டை அளவுடம்பே!**
**என்னைக் கவர்ந்த குருவியே,**
**நீ எங்கே சென்றாய் இங்கே வா!**



**தத்தித் தத்தித் தரை நடப்பாய்**
**தொட்டி நீரை நீ குடிப்பாய்**
**கொத்தி விதையை நீ தின்பாய்**
**சிறகை விரித்து மேல் பறப்பாய்!**

**துள்ளித் திரிவாய்; கூச்சலிடுவாய்;**
**தொடர்ந்து இன்பம் பாய்ச்சிடுவாய்;**
**வள்ளி யப்பா தேடுதற்கு**
**விண்ணில் பறந்து மறைந்தாயோ?**

**இயற்கை அழகின் தனிப்படைப்பே!**
**இனிமை வளர்க்கும் புதுவரவே!**
**முயற்சி அதனின் மெல்லுருவே !**
**மகிழ்ச்சி எழுப்ப வந்திடுவாய்!"**

**–மலையமான்**

என்ற பாடலில் குருவியின் வாழ்வை எளிமையாகச் சொல்லி, அமரரான வள்ளியப்பாவைத் தேடி விண்ணில் பறந்ததோ? என்ற வினாவையும் முன் வைக்கிறார் கவிஞர் மலையமான் அவர்கள். அழகிய கற்பனை! பாடலில் கவிஞர் சந்த நயத்தோடு விளக்குகிறார்.

*****

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

37

ஒரு நாட்டின் மொத்த மதிப்பைக் கணக்கிடுவது கடினமானது. நாடு என்பது மக்களையும் சேர்த்தே அவர்களைப் பணமாக மதிப்பிட முடியாது. நாட்டின் நிலப்பரப்பைக் கொண்டும் அதனுள் உள்ள வளங்களைக் கொண்டும் ஒருவாறு மதிப்பிடலாம். ஆனால் அது சரியாக இராது.

தமிழ்நாட்டில் 8109000 எக்குட்டேர் (= 20037775 ஏக்கர், ~ 20 மில்லியன் ஏக்கர்) பரப்பில் வேளாண்மை செய்யப்படுகின்றதாம். ஒரு ஏக்கர் ஒரு இலட்சம் உருபாய் (இது 30இலட்சமாயின் 30ஆல் பெருக்குக), எனில் 2x10^12 உருபாய். இது 2 இலட்சம் கோடி உருபாய். (ஒரு கோடி என்பது 10^7 உருபாய்).

பயிர்த்தொழில் செய்யும் பகுதி 36% என்று ஒரு தரவு (ICAR) சொல்கின்றது. ஆக 64% இயற்கையான பகுதியும் (ஏரி குளங்கள், காடுகள், மலைகள்) நகர்ப்புறங்களும் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள 16 நகரங்களின் பரப்பளவு 58188.74 சதுர கி.மீ (தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பே 1,30,058 கி.மீ.).

நகரத்தில் சராசரியாக ஒரு சதுர அடி 5000 உருபாய் என்றால் 58188.74 சதுர கி.மீ ( = 6.26e+11) என்பது 3.13x10^15 உருபாய். (ஒரு கோடி என்பது 10^7 உருபாய்.), எனவே 3.13x10^8 கோடி உருபாய். 31 கோடியே கோடி உருபாய். (ஒரு சதுர அடி 10,000 உருபாய் என்றால் 62.6 கோடியே கோடி)

*****

# BRIEF LIFE SKETCHES OF THE EUROPEAN SCHOLARS

- Mahavidvan **Meenakshi Sundaram**

*Fr. Beschi in 1713 was transferred to Tirunelvelly. It was here that he was arrested and imprisoned. In jail he wrote a letter to Rome in which he said, "I have been sentenced to death ..." He however, escaped the penalty due to the interven- tion of influential friends. In 1714, Beschi had again to flee for his life. Ramnad and Tanjore were again at war and no priest could enter either country without risking his life. Beschi in 1716 went to Yelakurichi which became his working place. A short-lived relief came with the advent of Muslim rule. During the whole of 1716, Beschi had no defiinite abode and kept on changing his place of stay at the cost of his health. While at Yelakkurichi (in 1717) he became almost bedridden with a virulent tumour and was obliged to go to Pondicherry for rest and reco- very. These numerous transfers were a blessing in disguise. He became well acquainted with the diverse customs of the people. His knowledge of their day to day habits, customs and beliefs became profound. This knowledge stood him in good stead when he helped the Mylapore Bishop in 1726 in the canonical process on the martyrdom of St. John-de-Britto, who was brutally attacked and murdered in 1693 in the Marava country. This deep know- ledge again is evident in his work Veta Vilakkam. This was written at his superior's bidding, to refute the Lutherans' (of Tranquebar) attacks on the Catholic church. This unfortunately led to a number of attacks and counter attacks. Fr. Beschi was perpetually at loggerheads with the Tranquebar missionaries. His keen observation and unsurpassed capacity to learn languages was a great asset to the Catholic Mission. In 1721, Fr. Nadal wrote to Paris thus "Fr. Beschi knows Tamil to perfection and writes beautiful verses, a feat so far accomplished by no other missionary."*

******



## வள்ளுவம்..!

- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

# 9. வள்ளுவ அரசு

இந்தியக் குடியரசில் தேர்வுக்காலத்து மக்கள் மதிக்கப்படுகின்றனர்; நாள்தோறும் இகழப்படுகின்றனர். அரசு வினையாளர்கள் தேர்வில் வென்ற மாற்றாளிகளைத் தம் அலுவலகத்து வரவேற்கின்றனரேயன்றி, அன்னோரைத் தேர்ந்தெடுத்த உரிமைக் குடிமக்களைக் கால்கடுக்க வெளியே நிறுத்துகின்றனர். 'இன்று போய் நாளை வா' என்று கால் கடுத்தபின் நாள்தோறும் ஏவுகின்றனர்; விளக்கேற்றிய தீக்குச்சியைப் போல் அவமதிக்கின்றனர். இந்திய விடுதலையால் இருபத்தொரு வயது வந்தோர் பெற்றது தேர்வுரிமை. அனைத்து மக்களும் பெறாதது மதிப்புரிமை. வழக்கு மன்றங்களும் அலுவலக வாயில்களுமே போதிய கண்காட்சியாகும்.

பொதுவாய் மக்கள் அரசியற்கண் அமைச்சர்களோடு தொடர்பு கொள்ள இடமில்லை. கீழ்நிலைப் பதவியாளரொடுதான் மிகுதியான தொடர்பு நாள்தோறும் கொள்ப. ஓர் அலுவலகத்து முன்னிற்கும் வாயிலோன் செய்யும் அட்டூழியம் கொஞ்சநஞ்சமா? அவன் விடைகொடுத்தாற்றான் மேல் வினையாளரைப் பார்க்க முடியும். மேல் வினையாளரைப் பார்க்க முடியும். மேல் வினையாளரோ திடீரென இருக்கை விட்டு வெளிவந்து காட்சிக்கு எளியராகி ஆண்டு நிற்கும் கால்நடையனைய மக்களைப் பார்த்து 'நீவிர் வேண்டுவது என்ன?' என்று வினவார்; வினவுவது பெருமைக் குறைவு எனக் கருதுவார். ஆதலின், விரைந்து காரியம் முடிக்கும் பொருட்டுக் கையூட்டுக் கொடுப்பது இன்றியமையாதது ஆகின்றது. வாளயில் காவலனுக்குச் சில்லறை ஈந்தால், நம்மை அழைத்துக் கொண்டு மேல் வினையாளன் முன்னிறுத்தி, வேண்டியது சொல்லிச் செல்வான்; வினை முடிந்து மீளுங்காலைப் பன்னும் சில்லறை வீசினால், என்று செல்லினும் ஆசையால் மீண்டும் நன்றி காட்டுவான். இஃது பரந்து காணப்படும் இழிமுறை.

கையூட்டும் வாங்குவானும் குற்றவாளி; கொடுப்பானும் குற்றவாளி என்று சட்டம் செய்வதால், இக்கொள்வினை கொடுப்புவினை நின்றுவிடாது காண். 'ஏன் வாங்குகின்றான்? ஏன் கொடுக்கின்றான்?' என்பதை ஆராய வேண்டும். யாரும் பொருள் வாங்க விரும்புவர்; கொடுக்க விரும்பார். ஆதலின் மக்கள் வாங்க விரும்புவர்; கொடுக்க விரும்பார். ஆதலின் மக்கள் கையூட்டு வழங்குதற்கு காரணம் என்ன? என்று துருவத்தகும்.

வளரும்...



# தமிழன்னை நான்மணிமாலை

156

- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
சங்க இலக்கிய ஆய்வறிஞர்

**"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்"** – (குறள் 489)

"கிடைத்தற்கரிய காலம் கூடி வரும்போது, அப்பொழுதே செய்வதற்கு அரிய செயலைச் செய்ய வேண்டும்" என்பது வள்ளுவரின் வலியுறுத்தல். தகுந்த காலம் வாய்க்கும்போதும் தளர்ந்து முடங்காமல் தக்கனவற்றைச் செய்யச் சொல்லும் அறிவுறுத்தல். குறிப்பிட்டதொரு செயலை நேர்த்தியாகச் செய்வதற்கு எப்போதும் உடனே காலம் வாய்த்துவிடாது. காலம் கனிந்து வரும்போது மிகும் மனச்சோம்பல் நல்ல செயல்களை முறையாகச் செய்ய விடாது.

எந்த செயலுக்கும் தக்க காலம் பார்த்து ஊக்கத்தைக் கைவிடாமல் காத்திருந்து செய்வார் அறிவுடையார். அவரே உழைப்பின் அருமை தெரிந்து இயங்கும் மனச் செறிவுடையார். அறிவாளர் தமது செயல்களின் திட்டங்களை உடனுக்குடன் வெளிக்காட்ட மாட்டார். தமது நீண்ட காலத்திட்டத்தில் இடையில் ஏற்படும் சிறுசிறு வெற்றிகளைக் காட்டி ஆர்ப்பரிப்போர் இறுதியில் வெற்றிக் கொடி நாட்டார்.

காலத்தோடு ஒன்றிப் பயணித்துக் கடுமையாக உழைத்துக் கடமையாற்றுபவர் ஒவ்வொரு செயலின் இறுதியிலும் சிறப்பர். தமது கடமைகளில் வலிகள் ஏற்பட்டாலும் வெற்றிகளால் நோக்காடுகளை எளிதில் மறப்பர். "காலம் அறிந்து கடையாற்றி வெல்க. அந்த வெற்றிகளையே பிறருக்குச் சொல்க" என்று அறிவுறுத்தினாள் தமிழன்னை. அன்னைக்கு என் அன்பு மாலை.

## அகவல்

உயர்வை நாடும் உளத்தால் நல்ல
இயல்பை வளர்க்கும் எண்ணம் கொடுத்தனள்
சிந்தை தெளிந்து செம்மை பரப்பி
விந்தை புரியும் வினைகள் தேடிட
அன்றே சொன்னாள் அவளே தெய்வம்
என்றே வணங்கினேன் ஏற்றனள் எனையே
சென்றேன் யானும் சீரிய வழியில்
வென்றேன் சிலவாய் வித்தகத் தமிழில்
நன்றே செய்தேன் நற்கவி யாக
ஒன்றே தேவை ஒன்றது நேர்மை
என்றே அறிந்தேன் என்துறை தன்னில்
கொன்றேன் மயக்கம் கொள்கை நிரப்பி
நின்றேன் மண்ணில் நீடு வாழவே
குன்றேன் இனியும் கூற்றம் வரும்வரை
பொன்றா தொளிரும் புகழை வேண்டி
மன்றா டினேனவள் மலரடி பற்றி
என்றோ விதைத்த இலக்கிய வேட்கையால்
இன்றோ விளைத்தேன் என்விருப் பேபோல்
ஒன்றே நினைத்தே ஊன்ற
மன்றில் நிலைக்கும் மங்கலம் வருமே

## வெண்பா - 160

வருவதை ஏற்று வளர்வதும் அன்னை
தருவதை ஏற்பதும் தங்கி - மருவிலா
வாழ்வை வழங்கிடும் வண்ணமும் தீட்டிடும்
தாழ்விலா தோங்கும் தகுதி

## கட்டளைக் கலித்துறை

தகுதியால் வென்றிடும் தன்முனைப் போடு தமிழுலகில்
பகுதியால் என்றுமே பாற்பட் டொழுகிடாப் பண்புகளின்
தொகுதியால் நின்றே துலங்கினேன் வாழ்வில் தொடர்புகழின்
மிகுதியால் இன்று மிளிர்ந்தவன் என்றால் மிகையிலையே.

## எழுசீர் விருத்தம்

மிகையாய்த் தோன்றும் மேன்மைகள் எல்லாம்
மிகவும் சிறிதாம் மேலவர்க்கே
பகையாய்த் தோன்றும் பண்புகள் தம்மை
பணிவாய்ச் சுருக்கிப் பார்த்திருளின்
குகையாய் வாழ்வோர் கொள்கை மாற்றிக்
கொடுத்தே திகழும் குணவகையின்
தொகையாய் வாழ்ந்தே தோல்வி இன்றித்
துலங்கச் செய்தாள் துணையளித்தே.

133

# அகலாது அணுகாது பழகுக



- புலவர் தி.வே.விஜயலட்சுமி

## ஆண்டவன் - இறையுணர்வாளன்

ஆண்டவனுடன் தந்தை - மகன் முறையிலும் ஆண்டவன் - ஆண்டான் முறையிலும், ஆண்டவனுடன் தோழமை முறையிலும் பழகுதல் என்ற மூன்று வழிகள் உள்ளன. அகலாது அணுகாது தீக்காய்வார்போல் இறைவனிடம் பழகின் துன்பங்கள் ஏதும் நேரா.

கவிமணி அவர்கள் பாடிய பாடல் ஒன்றில் இறைவனிடம் பழகும் முறை அறியாது அவனை மிகவும் அணுகி, மிக்க உரிமை எடுத்துக் கொண்டு பழகியதைப் பாடுகின்றார்.

"நுண்ணுகற் காணவழி வேறேதும் கண்டிலேன்;
நானும் என் களி மயக்கால்
நண்பன் என்றே அழைக்கின்றனன்; என்னை ஆள்
நாதனே! ஞானபரனே"

என்னை அடிமையாகக் கொண்ட அண்ணலே! உன் பெருமையையும் சிறுமையும் நீக்காது உன்னை என் நண்பன் என்றே அழைக்கின்றேன். "அண்ணலே! பழகும் முறை அறியாத காரணத்தால் நேர்ந்த பிழை இதைப் பொறுத்தருள வேண்டும்" என்ற பொருள்பட இப்பாடலில் விளங்குகிறது.

எனவே, நாடாள்வார், அதிகாரிகள், ஆசிரியர்கள், ஆண்டவன் அனைவரிடமும் அகலாது அணுகாது தீக்காய்பவர் போலப் பழக வேண்டும்.

அதுவே நாகரிகம். பண்பாடு. தம்மினும் ஆற்றல் மிகுந்த பெரியோரிடத்தில் காதருகில் பேசுதலும் மற்றவருடன் சேர்ந்து சிரிப்பதும் செய்தல் கூடாது. அவர்கள் மறை பொருள் (இரகசியம்) பேசும் போது எதையும் ஓர்ந்து செவி கொடுத்துக் கேட்கக் கூடாது. அவர்களே வெளியிட்டால் தான் கேட்டுக் கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவரின் தெளிந்த கருத்தாம்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. (குறள்.694)

ஆட்சியாளர்களை அகவையால் இளையவர் என்பதற்காகவோ, உறவினர் என்னும் உரிமை கொண்டதாலோ, அவரால் அதிக அன்பு காட்டப்படுவேம் யாமெனும் ஆணவத்தாலோ, 'பல்லாண்டுக் காலம் பக்கத்திலிருந்து தக்க அறிவுரை தந்துள்ளோம்' என்னும் தருக்காலோ அவர்களை அலட்சியப்படுத்தாமல் இருத்தல் சாலவும் நன்றாம் என்று திருவள்ளுவர் பெருந்தகை குறிப்பிடுகின்றார்.

பெரியோர்களையும் ஆட்சியாளர்களையும் அணுகி நடந்து கொள்ள வேண்டிய அணுகுமுறைகளைப் பத்துக் குறட்பாக்களில் நுணுக்கமாகத் திருவள்ளுவர் விளக்குவதை ஊன்றிப் படித்து நம் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வோம்.

*********

10



முனைவர் க.சுபாஷிணி

# 1898இல் பினாங்கில் கல்வி



பினங்கு விஜய கேதனன்.

The 'Penang Standard.'

சனிக்கிழமைதோறும் பிரகடனஞ்செய்யப்படும்

படியிடைக்கல்வியை புற்ஜூர் வெற்றிக், கொடியுடையாரெனக் கொள்ளுக்கள்.

புத்தகம் 3.] பினங்கு:—8உ அக்டோபர் மீ 1898 வருஷம் [இலக்கம் 2

பத்திரிகைக் கிரயம்.

உள்ளூராருக்கு.................மீ 1-க்கு காசு 25

வெளிதேசத்தாருக்கு தபாற் செலவுடன் மீ 1க்கு 30

மேல்விலாசம்.

"பினங்கு விஜயகேதனன்" பத்திரிகைச் சொந்தக்காரராகிய S. P. S. K. காதிறு சாஹிப் 130 சோலியாஸ்டிரீட் பினங்கு என்றெழுதவேண்டும்.

S. P. S. K. Kader Sahib,
Editor and Proprietor
The *Penang Standard.*
130, Chulia Street,
Penang.

— பினங்கு விஜயகேதனன் —

பினங்கு:—8உ அக்டோபர் மீ 1898.

பெற்றோரும், பிள்ளைகளும்.

1886இல் முதலில் வெளிவந்து பின்னர் 1888 வாக்கில் ஆங்கில பெயரையும் உள்ளடக்கியவாறு வெளிவந்த "பினாங்கு விஜய கேதனன்" பத்திரிகையின் 1898ஆம் ஆண்டு அக்டோபர் மாத இதழ் அக்காலகட்டத்தில் பினாங்கில் தமிழ் மக்களின் குழந்தைகளின் கல்வி நிலை பற்றிச் சில தகவல்களைப் பதிகின்றது.

இதில் இடம்பெறுகின்ற ஆசிரியர் தலையங்கம் போன்ற முதற்பகுதி கல்வி, தமிழ்ச் சமூக நிலைகளைத் தொட்டுக் கருத்துப் பதிகிறது.

தற்காலத்தில் பினாங்கில் வந்து வசிக்கும் தமிழ்நாட்டினர் கல்வியின் முக்கியத்துவம் தெரியாமல் இருப்பதாகவும் குழந்தைகளைப் பல்வேறு வேலைகளைச் செய்ய அனுப்புவதாகவும் குற்றம் சுமத்துகிறது. மேலும் கடைத்தெருக்களில் உள்ள திண்ணைப்பள்ளிக்கூடங்களில் அரிச்சுவடி, எண்கள் போன்றவற்றை ஆழ்ந்த அக்கறையின்றி ஆசிரியர்கள் கற்றுத் தருகின்றனர் என்றும் சாடுகிறது.

இந்த அவல நிலைக்கு மாற்றாக ஆங்கிலேய முகம்மதிய பள்ளிக்கூடம் ஒன்று பினாங்கில் சூலியா ஸ்ட்ரீட் சாலையில் எண் 130இல் உள்ள கட்டடத்தில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கடந்த ஆறு மாதங்களாக இங்குக் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதையும் இப்பத்திரிகை பதிந்திருக்கின்றது.

இந்த அடிப்படை பள்ளியில் ஆங்கிலேய அரசு ஏற்படுத்தியுள்ளபடி ஆங்கிலம், வாசிப்பு, எழுத்து, கணிதம், பூகோளம், இலக்கணம், சொற்கள்,

தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசிப்பு, எண்கணிதம், ஆத்திச்சூடி, ஔவையார் இயற்றிய செய்யுட்கள், உரையுடன் பயிற்சி பெறும் வகையில் நடத்தப்பட்டன.



A 19th-century view of Chulia Street, showing the street congested with bullock carts and rickshaws / Wade Collection

இப்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கற்பார்கள். இங்கு ஆங்கிலத்தில் மூன்றாம் நான்காம் வகுப்பில் தேறிய மாணவர்களைப் பினாங்கின் முதல் பள்ளிக்கூடம் என அழைக்கப்படும் புகழ்மிக்க "பினாங்கு ஃப்ரீ ஸ்கூல்" பள்ளிக்கு அடுத்த கட்ட உயர் கல்விக்கு இணைத்துக் கொள்வார்கள் என்பதையும் குறிப்பிடுகிறது.

இத்தகைய பல்வேறு பயன்களைக் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு வழங்கக்கூடிய கல்வியை வழங்குகின்ற இந்த "ஆங்கிலேய முகம்மதிய" பள்ளிக்கூடத்திற்குக் குழந்தைகளை அனுப்புங்கள் என்று கோரிக்கை வைக்கின்றது 1898 அக்டோபர் மாத பினாங்கு விஜய கேதனன்.

இப்பள்ளியில் படிப்பதற்குக் கட்டணமும் வசூலிக்கப்பட்டது. அவ்வகையில், ஒவ்வொரு மாதமும் கீழ்க்காணும் வகையில் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

முதலாம் வகுப்பு - 50 காசு

இரண்டாம் வகுப்பு - 50 காசு

மூன்றாம் வகுப்பு - 75 காசு

நான்காம் வகுப்பு - 1 வெள்ளி (மலாயா)

பள்ளியில் சேர்க்கப்படும் மாணாக்கர்களை இடையிலே நிறுத்தக்கூடாது என்றும் குறைந்தது ஒரு வருடமாவது அவர்களைப் பள்ளியில் படிக்க வைக்க வேண்டும் என்றும் இப்பத்திரிகை அறிவுரை கூறுகிறது.

ஆக, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் செயல்பாட்டில் இருந்த திண்ணைப்பள்ளிகள் தரமான கல்வியை வழங்கவில்லை என்பதும் அதற்கு மாற்றாக பினாங்கில் அரசு தமிழ் இஸ்லாமியர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட முயற்சிகளின் பலனாக ஒரு தமிழ்ப்பள்ளி ஒன்று 1898இல் தொடங்கப்பட்டதை இந்த ஆவணத்தின் வழி அறிகின்றோம்.

[குறிப்பு: இப்பத்திரிகைச் செய்தி இக்கட்டுரை ஆசிரியரால் பிரித்தானிய நூலகத்தின் "இந்தியா அலுவலகம்" பகுதியில் உள்ள ஆவணப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து 11.03.2025 அன்று மின்னாக்கம் செய்யப்பட்டது]

******




*மே மாதம் 21-ஆம் நாளில் மலர்ந்த 285- ஆவது உலகத்தமிழ் இதழ் கண்டு மகிழ்ந்தேன். படித்து நெகிழ்ந்தேன்.*

*35 - பக்கங்களில் பொருள்மிகு கவின் கட்டுரைகளையும் செய்திகளையும் வாரி வழங்கும் அமுதசுரபியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல.*

*உள்ளடக்கங்கள் எல்லாம் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது.*

*வழக்கம் போல இடம்பெற்ற முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறை நடத்தி வரும் திருக்குறள் போட்டிக்கான பரிசுத் திட்டம், அதற்கான பரிசுத்தொகை ரூபாய் பத்தாயிரம் பற்றிய செய்தி விவரமாக வெளியிடப்பட்டிருக்கிறது.*

*இது வளருகின்ற மாணவர்கள் மத்தியில் குறளைப் படித்திடவும் குரல் வழி நடந்திடவும் பேருதவியாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.*

*எத்தனையோ போட்டிகளை நடத்தி மாணவக் கண்மணிகளை மெருகேற்றி வரும் தமிழ் வளர்ச்சித் துறையின் இத்தகைய செயல்பாடுகள் என்றும்... இன்னும் தொடர வேண்டும் என்பதுதான் நமது விருப்பம்... ஆசை... எண்ணம்... எல்லாமும்தான்.*

*அடுத்த பகுதியான நூலேணி மற்றும் தமிழெழுச்சி ஆகிய பகுதிகள் என்றும் போல தத்தம் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.*

*ஆசிரியம் பகுதியில் சுறுசுறுப்பின் அடையாளம் தேனீ என்கின்ற தலைப்பில் ஒரு கட்டுரை அல்லது ஒரு சிற்றுரை இடம் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.*

*ஐக்கிய நாட்டு சபை இந்தத் தேனீக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து மே - 20 ஆம் நாளை உலகத் தேனீ நாளாக அறிவித்திருப்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றுதான்.*

*இந்தத் தேனீ என்கின்ற ஈ வகையைச் சார்ந்த உயிரினம் மனிதனுக்கும் விவசாயத்திற்கும் இன்னும் சொல்லப்போனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் முக்கிய பங்களிக்கும் ஒரு உயிரினமாக இருந்து வருகிறது.*

*தேனீ என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது சுவையான தேன் மட்டும்தான்.*

*தேன் என்பதைத் தாண்டி தேனீ எந்த வகையில் எல்லாம் பயன் அளிக்கிறது என்பது இந்தப் பகுதியில் சற்று விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.*

*காய்கறிகள், எண்ணெய் உற்பத்திக்கான பயிர்கள் மட்டுமல்லாது பாதாம், வால் நட்டுகள், காபி, கோகோ பீன்கள், தக்காளி, ஆப்பிள் முதலிய மனித குலத்திற்கு ஆரோக்கியம் தரும் பயிர்களில் மகரந்தச் சேர்க்கைக்கும் இந்தத் தேனீ பெரும் பங்கு ஆட்சி வருகிறது என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிற ஒரு செய்தியாகும்.*

*இன்னும் இந்தத் தேனீ சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பெரும் பங்கு அளிக்கிறது என்பது கூடுதல் செய்தியாகும்.*

*பொதுவாக நாம் விவசாயப் பயிர்களில் உள்ள கெட்ட பூச்சிகளை ஒழித்திட பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துகையில் இந்தத் தேனீக்களும் அழிந்து போகிறது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.*

*இதற்காக இயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்தலாம் என்கின்ற*

கருத்தும் இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் நாம் தேனீக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதே இந்தப் பகுதி நமக்குச் சொல்லும் ஒரு பாடமாக நான் பார்க்கிறேன்.

அடுத்த பகுதியான அவ்வப்போது பகுதியில் செம்மொழித் தமிழின் சிறப்புகளை, செம்மாந்த தமிழின் செழுமைகளை விரிவாகச் சொல்லி அந்தத் தமிழ் வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கும் நமது மாண்புமிகு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ் வளர்ச்சித் துறை பீடுநடை போட்டு வருவதாக பதிவிட்டிருப்பது போற்றத்தக்கது.

தேன் துளி ஒன்றில் சொ.சொ.மீ அவர்களின் முத்துவிழாவில் இடம் பெற்று அருமையான வெண்பா ஒன்று இடம் பெற்று இருக்கிறது... சிறப்பான கவிதைதான்.

அடுத்த துளியில் இந்திய அளவில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் எண்ணிக்கையும் அதில் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையும் குறிக்கப்பட்டு இருக்கிறது. நல்லதொரு புள்ளி விவரம்தான்.

திருக்குறளார் பற்றிய குறிப்பு கடந்த வாரத்தைப் போல இந்த வாரமும் ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் வெளியாகி இருக்கிறது. அதனை வாசிக்கையில் கடைசி வரி என்னை ஒரு நிமிடம் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது...

அந்த வரி "குருதி நாளங்களில் குறளைச் சுமந்தவர் ஆயிற்றே" என்ற திருக்குறளார் பற்றிய வரி ஆகும்.

முனைவர் தேவி. நாச்சியப்பன் வாரம் தோறும் குழந்தைகளுக்கான இலக்கியங்களை படைத்து வரும் சில கவிஞர்களை, எழுத்தாளர்களை குழந்தைக் கவிஞர் பரம்பரை என்கின்ற பட்டியலில் நமக்குத் தந்து வருகிறார்.

எல்லாக் கவிஞர்களையும் அவர் தருவதில்லை.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் அடியொற்றி எழுதி வரும்... எழுதி வந்த கவிஞர்களைத்தான் நமக்குத் தருகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் இந்த வாரம் குழந்தைகளுக்காகப் பாடல்கள், சிறுகதை, நாவல் எனப் பலதரப்பட்ட இலக்கியங்களைப் படைத்த எஸ். விஜயலட்சுமி பற்றிய ஒரு குறிப்பு தந்திருக்கிறார்.

பெண் எழுத்தாளர்கள் குறைந்த காலத்தில் விஜயலட்சுமி அம்மையார் எழுதியிருக்கிறார் என்பதே ஒரு சிறப்பன்றோ? இவருக்கு ஊர்? எந்த மாவட்டம்? என்கின்ற செய்தி குறிப்பிடப்படவில்லை என்றாலும் அவர் எழுதிய "வெளிச்சம் கிட்டும்" என்கின்ற ஒரு பாடலை தேவி. நாச்சியப்பன் பதிவு செய்திருக்கிறார்.

இந்தப் பாடல் எஸ். விஜயலட்சுமி அவர்களின் பாடலுக்குப் புகழ் சேர்க்கும் பாடலாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

"நாம் வட்டிப் பணத்தை பாதியாகக் குறைத்தாலே நிறைய பயன்விளையும் திட்டங்களைச் செயல்படுத்தலாம்" என்ற வரியைச் சொல்லி இருக்கும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுகள்.

புலவர் தி.வே. விஜயலட்சுமியின் அகலாது, அணுகாது, பழகுக சிறப்புதான்.

அறிவோம் -08 என்ற பகுதியில் *Information Technology & Digital Services Department*-இல் பணிபுரிந்த செயலர்கள் பற்றிய விவரங்களை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

முனைவர் க.சண்முகம் அவர்கள் தந்து வரும் அற்புதமான கட்டுரை வாரந்தோறும் புதிய புதிய செய்திகளை நமக்குத் தந்து வருகிறது.

சைபர் பாதுகாப்பும் குறுஞ்செயலிகளும் என்பதைப் பற்றி இந்த வாரம் அற்புதமாகச் சொல்லி இருக்கிறார்.

சைபர் குற்றங்களிலிருந்து நம்மைப் பாதுகாப்பது எப்படி என்கின்ற பாடம் என்பது நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்றுதான்.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே... என்கின்ற பகுதியில் தொடர்ந்து கவிஞர்களின் கவிதைகளைப் பார்த்து வருகிறோம்.

இந்த வாரம் பாவலர் இறையரசனின் கவிதையைப் படித்து மகிழ்கிறோம்.

செய்தி வெளியீடு பகுதியில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் நாளேடு செய்தி வெளியாகி இருக்கிறது.

அதாவது வரும் ஜூன் 3-ஆம் நாளை செம்மொழி நாளாகக் கொண்டாட தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது அல்லவா...

அந்த நாளைக் கொண்டாடுகின்ற விதமாக கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தப் போட்டிகளின் இறுதி நிகழ்ச்சி மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

அதில் வெற்றி பெற்ற மாணவர்களோடு நல்ல ஒரு ஒளி படத்தோடு செய்தி வெளியாகி இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

வாரந்தோறும் வெளிவரும் சட்டவியல் அகரமுதலி இந்த வாரமும் சிறப்புதான்.

தொடர்ந்து ஐயா ஔவை நடராசனார் அவர்களுக்கான புகழ் வணக்கம் பகுதியில் பல அறிஞர்கள் தங்களது இரங்கற்பாவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

குறிப்பாக முனைவர் சுலோச்சனா அவர்கள் சொல்லியிருக்கும் "பேச்சுகளோடும் எழுத்துக்களோடும் ஐயா வாழ்ந்து கொண்டிருப்பார்கள்" என்கின்ற வரி நமக்கு நெகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த வார உலகத்தமிழ் மின்னிதழ் 35-பக்கங்களில் பொருள்மிகு கவின் கட்டுரைகளோடும் செய்திகளோடும் வெளியாகி இருப்பது பாராட்டுதலுக்குரியது.



கவிஞர் பேரா, திருநெல்வேலி.




21.05.2025 உலகத்தமிழ் 285 கலைஞர் தொடங்கிய குறள் பரிசுத் திட்டம் மூலம் ஆண்டுக்கு 70 மாணவர்களுக்கு ரூபாய் 10000/- வழங்கப்பட்டு வந்தது. 2022ஆம் ஆண்டு முதல் 1330 குறள்களையும் மனப்பாடம் செய்த அனைத்துக் குழந்தைகளுக்கும் (219) வழங்கப்பட்டு வரும் தகவல் கொள்கை விளக்கக் குறிப்பில் மூலம் தெரிந்தது. சிறப்பு.

2018ஆம் ஆண்டு முதல் மே 20ஆம் நாள் உலகத் தேனீ நாளாக அறிவிக்கப்பட்ட விவரம் ஆசிரியம் பகுதியில் கண்டேன்.

மேலும் தேனீக்கள் சுற்றுச்சூழலுக்கும் மனித வளர்ச்சிக்கும் பேருதவியாக உள்ளன; தேனீக்கள் மணிக்கு 40 கி.மீ வேகத்தில் பறக்கும்; ஆண்டுக்கு ஒரு இலட்சம் கி.மீ பறக்கும் என்பது வியப்பு.

அவ்வப்போது பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்னெடுக்கும் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பெருமையோடு ஆசிரியர் பாராட்டி எழுதியுள்ளார்.

தேன் துளி 1 சொ.சொ.மீ. அவர்களின் முத்து விழாவில் ஔவை நடராசனார் வழங்கிய அழகிய வெண்பா.

தேன் துளி 2 2021-22இல் இந்தியாவில் 1168 பல்கலைக்கழகங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 62 பல்கலைக்கழகங்கள் என்ற தகவல்.

ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் திருக்குறள் முனிசாமி போல் வாழ்க்கை நெறிமுறைகளை நயமாகவும் நகைச்சுவையாகவும் வேறு யாரும் சொல்ல முடியாது என்றும் தமிழ் வளர்ச்சித் துறையில் நான் இருந்தபோது அவரோடு பணி புரிந்த காலம் மறக்க முடியாதது எனவும் ஔவை நடராசன் ஐயா எழுதியுள்ளார்.

வ.சுப.மாணிக்கனாரின் வள்ளுவ அரசு, புலவர் திருமதி தி.வே.விஜயலட்சுமி அம்மாவின் கட்டுரைகளில் அரிய கருத்துகள் உள்ளன.

முனைவர் திருமதி க.சுபாஷிணி அவர்கள் "சிங்கை நேசன் பற்றிய கடிதம்" நன்று.

முனைவர் திரு க.சண்முகம் அவர்கள் சைபர் பாதுகாப்பும் குறுஞ்செயலிகளும் என்ற அருமையான கட்டுரை வழங்கியுள்ளார்.

கலைஞர் பிறந்தநாள் செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படுவதும் அவ்விழாவில் பேச்சு, கட்டுரைப் போட்டி பரிசளிப்புப் படமும் செய்தி வெளியீடும் அருமை.

சட்டவியல் அகரமுதலி, புகழ் வணக்கம் நிறைவாக இடம் பெற்றுள்ளது. மகிழ்ச்சி.




முனைவர் தேவி நாச்சியப்பன்

# தலைமைச் செயலாளர்கள் பட்டியல் விவரம்

| வ.எண் | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.வி.ராமமூர்த்தி C.I.E.,I.C.S., | 27.11.1940 | 09.05.1947 |
| 2. | திரு. இ.எம்.கவனே C.S.I.,C.I.E.,I.C.S., | 13.08.1942 | 31.07.1946 |
| 3. | திரு.ஜி.டபுள்யு.பிரிஸ்ட்லே C.I.E.,I.C.S., | 21.11.1942 | 31.05.1944 |
| 4. | திரு.ஜே.பி.பிரௌன் C.S.I.,C.I.E.,I.C.S., | 01.06.1944 | 05.02.1946 |
| 5. | திரு. டபிள்யு.எஸ். பிரௌன் C.S.I.,C.I.E.,I.C.S., | 15.04.1946 | 14.08.1947 |
| 6. | திரு.சி.எச்.மாஸ்டர் மேன் | 06.02.1946 | 08.02.1946 |
| 7. | திரு. கே..இரா.முன்னி மேனன் C.I.E.,I.C.S., | 09.02.1946 | 31.08.1955 |
| 8. | திரு.சி.கே.விஜயராகவன் I.C.S., | 09.05.1949 | 29.05.1949 |
| 9. | திரு.டபுள்யு.ஆர்.எஸ்.சத்தியநாதன் I.C.S., | 08.06.1954 | 14.11.1959 |
| 10. | திரு.எம்.வி.சுப்ரமணியன் I.C.S., | 01.06.1957 | 31.07.1957 |
| 11. | திரு.டி.என்.எஸ்.ராகவன் I.C.S., | 05.02.1959 | 29.11.1960 |
| 12. | திரு.எஸ்.வெங்கடேஸ்வரன் I.C.S., | 13.04.1960 | 24.07.1960 |
| 13. | திரு.ஆர்.ஏ.கோபாலசாமி I.C.S., | 30.11.1960 | 21.11.1962 |

| வ.எண் | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 14. | திரு.எஸ்.கே.செட்டூர் I.C.S., | 22.11.1962 | 01.12.1964 |
| 15. | திரு.டி.ஏ.வர்கீஸ் I.C.S., | 02.12.1964 | 09.11.1965 |
| 16. | திரு.சி.ஏ.ராமகிருஷ்ணன் I.C.S., | 10.11.1965 | 13.11.1969 |
| 17. | திரு.இ.பி.ராயப்பா இ.ஆப., | 14.11.1969 | 12.04.1971 |
| 18. | திரு.ப.சபாநாயகம் இ.ஆப., | 12.04.1971 | 11.03.1976 |
| 19. | திரு.வி.கார்த்திகேயன் இ.ஆப., | 12.03.1976 | 15.02.1977 |
| 20. | திரு.சி.வி.ஆர் பணிக்கர் இ.ஆப., | 16.02.1977 | 30.06.1977 |
| 21. | திரு.வி.கார்த்திகேயன் இ.ஆப., | 30.06.1977 | 21.08.1981 |
| 22. | திரு.கே.திரவியம் இ.ஆப., | 22.08.1981 | 24.01.1983 |
| 23. | திரு.கே.சொக்கலிங்கம் இ.ஆப., | 11.02.1983 | 31.03.1985 |
| 24. | திரு.டி.வி.ஆன்டனி இ.ஆப., | 01.04.1985 | 20.07.1986 |
| 25. | திரு.ஏ.பத்மநாபன் இ.ஆப., | 21.07.1986 | 05.02.1988 |




எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே!

# தமிழ்த் தாய்!



90



பாவலர் இறையரசன்

கீழ்க்கணக்கும் மேல்கணக்கும் ஈன்றவளே! தமிழர்
        கெழும்புகழை உலகறியும் சான்றவளே! நெஞ்சில்
ஆழ்ந்தினிக்கும் மேகலையை அணிந்தவளே! அறிஞர்
        அறிந்துவக்கும் பழக்கருத்தாய்க் கனிந்தவளே! வெற்றி
சூழ்ந்துவரத் தமிழர்க்கு வாய்த்தவளே! வேதச்
        சூழ்ச்சியரை மாவளத்தால் சாய்த்தவளே! எம்முன்
காழ்த்திருக்கும் அறிவமிழ்தத் தூயவளே! நெஞ்சில்
        களிப்பேற்றும் மொழிக்குடும்பத் தாயவளே! வாழ்க!

அருணகிரி வண்ணத்தில் எழுந்தவளே! எம்மின்
        அறிவகற்றும் பயிர்நாற்றுக் கொழுந்தவளே! நான்கு
வருணத்தைச் சாய்த்துயர்ந்து சிரிப்பவளே! வெற்றி
        வாகையொன்றே என்றென்றும் தரிப்பவளே! வான்போல்
கருணையவன் வடலூரான் அன்னையளே! அவனின்
        கவிதைக்குள் இளநீராம் தென்னையளே! ஆளும்
அருளாளர் கலைஞருளம் இருப்பவளே! மனிதம்
        ஆளுமுயர் ஐம்பூத நெருப்பவளே! வாழ்க!

...முற்றும்

**English - Tamil Legal Glossary**

**Dr.Marco A.Fiola**
**Department of Languages , Literatures and Cultures,**
**Ryerson Law Research Centre, Ryerson University**

*863) Money or other valuables that may be required to be paid into court or to another party*



*security* - உத்தரவாதம்; பொறுப்பு

*864) Monetary assistance that a person provides for his or her dependant(s)*

*support* - உதவி

*865) In family law cases, an order that a person provide support for his or her dependants, which sets out the amount to be paid and the time during which the support must be paid*

*support order* - உதவி ஆணை

*866) In family law cases, an order that allows the Family Responsibility Office (FRO) to collect support payments*

*support deduction order* - உதவித் தொகையைக் கழிக்கும் உத்தரவு

*867) the written rules for conduct of a corporation, association, partnership or any organization*

*bylaws* - உபவிதிகள்

*868) A judge or justice other than the chief judge or chief justice of a court*

*puisne judge* - உயர்நீதிமன்றத் துணை நீதிபதி

*869) A legal document issued by a Superior Court of Justice confirming that the will filed with the court is the last will of the deceased and that the person named as estate trustee in the will has authority to administer the estate of the deceased person. (Commonly referred to as "letters probate" or "probate")*

*certificate of appointment of estate trustee with a will* - உயில் அறங்காவலர் பொறுப்பில் நியமனச் சான்றிதழ்

*870) Where a person has died without a will, it is a legal document issued by a court authorizing a person to administer the estate of the deceased person. (Commonly referred to as "letters of administration" or "administration*

*certificate of appointment of estate trustee without a will* - உயில் அற்ற அறங்காவலரை பொறுப்பில் விடும் சான்றிதழ்

*****



# புகழ் வணக்கம்

127

| | |
|---|---|
| 799 | ஆழ்ந்த இரங்கல்<br>Arumuga velu |
| 800 | தமிழ்க்கடல் சாய்ந்தது. ஐயா அப்பாவை இழந்துவாடும் தங்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை. தந்தையைத் தன் பிள்ளைப்போல பார்த்தவர் நீங்கள். உங்கள் துன்பத்தில் நானும் பங்கெடுத்துக்கொள்கிறேன்.<br>Durai manikandan |
| 801 | அப்பா செய்தி கேட்டு மிக மிக வருத்தம் அடைந்தேன். அப்பாவின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.<br>நிர்மலா mohan |
| 802 | மாமனிதர்! மனிதநேயர்! சொல்லின் செல்வர்! தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பு! ஆழ்ந்த இரங்கல்! மாண்பமை இளவல் டாக்டர் அருள் அய்யா வணக்கம். எங்கள் மூத்த அண்ணன் தமிழ்ப் பேரறிஞர் அய்யா டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் மறைவு தமிழ் இலக்கியப் பேருலகிற்குப் பேரிழப்பு! ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்! யான் அயலூரில் இருப்பதால் இன்று நேரில் வந்து அஞ்சலி செலுத்த இயலவில்லை! இறவாப் புகழோடு என்றும் தமிழர் நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்பமை அண்ணன் மாமனிதர் மனித நேயர் அமரர் டாக்டர் ஔவை நடராசனார் அவர்கள் எழுத்துலக வேந்தர் பத்மபூஷன் டாக்டர் ஜெயகாந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எனது மணிவிழாவிற்கு நேரில் வந்து மனமுவந்து வாழ்த்தி அருளியதோடு மணிவிழா மலருக்கு மிகச் சிறந்த கீழ்க்கண்டுள்ள வாழ்த்துரையையும் நல்கி ஆசீர்வதித்தார்கள்!<br>Dr.USSR கோ.நடராசன் |
| 803 | Heartfelt Condolences, May his soul rest in peace<br>Rtn Prakash Singaram Pillai Schools |
| 804 | Dear Arul, it is really shocking to learn about your father from your Facebook post. He was truly a great scholar and I greatly respected and admired him. Our heartfelt condolences to you and your family<br>Tvh kn arun |
| 805 | Arul Anna, My deepest condolences on the demise of Avvai Natrajan mama avargal. A huge loss to our family, to the society of Tamil literature. He will continue to live in our hearts and the hearts of all Tamil lovers. May God give you the courage strength to stand this huge irreplaceable loss. May his soul rest in peace<br>Dr ganesh |